1979 மார்ச் 8]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை. (நிர்வாக சீர்திருத்தக் குழு அப்படி பரிந்துரைக்கவில்லை.)

(ஆ) கேள்வி எழவில்லை.

ஊராட்சி சாலைகள்.

* வினா எண். 287—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மன்றங்களின் பொறுப்பில் உள்ள சாலைகளை ஊராட்சிகளின் நிதி வசதி சீராக இல்லாததால் ஒன்றியங்களின் பராமரிப்பில் கொண்டு வருவது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து இல்லை.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களின் பொறுப்பிலே உள்ள சாலைகள் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பொது நிதியிலே பணம் ஒதுக்கப்படவில்லையென்றால் உள்ளாட்சிச் சாலைகள் சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை. இதுபற்றிய பல பிரச்சினைகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதுபற்றிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பெற்று அரசுக்கு அனுப்பப்பட்டிருகின்றன. உள்ளாட்சி சாலைகளைப் பராமரிக்கவேண்டுமென்றால் அதற்குப் பண வசதியில்லை. ஆகவே, லோக்கல் ரோட்ஸ் கிராண்ட்ஸை அதிகப்படுத்துவதற்கும், உள்ளாட்சிச் சாலைகளை ஒன்றியங்களே பராமரிக்கின்ற ஏற்பாட்டைச் செய்வதற்கும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஒன்றியங்களுக்கு உள்ளாட்சிச் சாலைகளை மாற்றுவது என்றால் மொத்தம் உள்ளாட்சிச் சாலைகள் 36,782 கிலோ மீட்டர் என்ற அளவிற்கு இருக்கின்றன. ஒரு கிலோ மீட்டருக்கு 60 ஆயிரம் ரூபாய் ஆகும் என்று தெரிவிக்கப்படுகிறது, இந்த நிலையில் மொத்தம் 221 கோடி அதற்கு மட்டும் தேவைப்படும். ஆகவே அவைகளை ஒன்றியங்கள் ஏற்பதற்கு வழியில்லை. ஓரளவிற்கு அவைகளைச் செப்பனிட்டு ஒன்றியத்திற்குப் பிறகு ஒப்படைப்பது தான் இயலும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, ஒன்றியங்களே உள்ளாட்சிச் சாலைகளைப் பராமரிக்கும் திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தஞ்சை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் ஊராட்சி சாலைகளை ஒன்றியங்களுக்கு மாற்றக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டு அதை அனுப்பியிருக்கிறார்கள், அதைப் பரிசீலிப்ப தற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பரிந்துரை அனுப்பப்பட்டிருந்தால் நிதி நிலைமையை ஆராய்ந்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

உணவு விடுதிகளில் தீண்டாமை மேற்கொள்ளுதல்.

* வினா எண். 288—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், முசிரி வட்டம், மகாதேவியில் உள்ள டீக்கடைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனி தகரக் குவளை வைக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : திருச்சி மாவட்டம், முசிரி வட்டம், மகாதேவி கிராமத்தில் உள்ள தேநீர்விடுதிகளில் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு தனித்தகரக் குவளைகள் வைக்கப்படும் பழக்கம் ஏதும் இல்லை என்று விசாரணையில் தெரிய வருகிறது. மேலும் அங்கு அப்படிப்பட்ட தவறுகள் நடப்பதாக அரசுக்குப் புகார்கள் ஏதும் வரவில்லை.

[முற்பகல் 9-50]

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, மகாதேவிக்கு நல்ல வரலாறு உண்டு அந்த ஊரைப்பற்றி. அங்கு இல்லை என்று மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தக் கேள்வி முறையாக காவல்துறைக்கு, போலீஸ் டிபார்ட்மெண்டுக்குச் சென்றிருக்க வேண்டும். அவர்கள்தான் முறையாக ஆய்வு செய்வார்கள். அரிசன நலத்துறையில் தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்ற வர்களுக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லாமல்